Tamil | தமிழ்

# குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறையின் உறுதிப்பாடு

(NSW Health's commitment to keep children and young people safe)

நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறையில், ஒவ்வொரு குழந்தையும் மற்றும் இளையோரும் ஒரு சுகாதார சேவைக்கு வரும்போது, அல்லது எங்கள் பராமரிப்பில் இருக்கும்போது பாதுகாப்பு உணர்வும், மரியாதையுடன் வரவேற்கப்படும் உணர்வும் அவர்களுக்கு இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குச் சுகாதாரச் சேவைகள் பாதுகாப்பான மற்றும் நட்பார்ந்த இடங்களாக இருப்பதை உறுதிசெய்ய, 10 குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளை நாங்கள் பயன்படுத்துகிறோம்.

குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது என்பது நாங்கள் எப்போதும் கவனத்துடன் செயல்பட வேண்டிய ஒன்று என்பதை நாங்கள் அறிவோம். கடந்த கால அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்டு, இன்னும் சிறப்பாகச் செயல்படுவதற்கான மாற்றங்களை நாங்கள் செய்துகொண்டு வருகிறோம்.

குழந்தைப் பாதுகாப்பிற்கான இந்த உறுதிப்பாட்டை எழுத்து வடிவில் கொண்டுவருவதில் எங்களுக்கு உதவ, குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடம் அவர்களுக்கு எது முக்கியம் என்று நாங்கள் கேட்டோம். பெரியவர்கள் தங்கள் பேச்சைக் கேட்க வேண்டும், அவர்களின் பராமரிப்பு குறித்த முடிவுகளில் தங்களையும் சேர்க்க வேண்டும், அத்துடன் அவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாக அவர்கள் கூறினர். பாதுகாப்பற்ற உணர்வு அவர்களுக்கு இருந்தால் அது குறித்து எப்படிக் குரல் எழுப்புவது மற்றும் தமது கருத்துகள் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட என்ன செய்யவேண்டும் என்பதையும் அவர்கள் அறிய விரும்புகிறார்கள்.

## நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை என்ன செய்யும்

நாங்கள்:

- பாதுகாப்பான உணர்வோடு இருப்பதில், உங்களது கருத்துகள் கேட்கப்படுவதில், கனிவாக நடத்தப்படுவதில் உங்களுக்கான உரிமை போன்ற உங்களது உரிமைகளை ஆதரவளிப்போம்.
- துஷ்பிரயோகம், தீங்கு, இனவெறி அல்லது நியாயமற்ற நடத்தையை அனுமதிக்க மாட்டோம்.
- பழங்குடியினரது அறியும், செயலாற்றும் மற்றும் வாழும் விதங்களை மதிக்கும் வகையில் பழங்குடியின (Aboriginal) குழந்தைகள் மற்றும் இளையோருக்கு சுகாதாரச் சேவைகள் பராமரிப்பு அளிப்பதை உறுதிப்படுத்துவோம்.
- வெவ்வேறு கலாச்சாரங்கள், மொழிகள் மற்றும் மதங்களைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குச் சுகாதார சேவைகள் பாதுகாப்பானதாகவும், வரவேற்கத்தக்கதாகவும் இருப்பதை உறுதிசெய்வோம்.
- உங்களுக்கு ஒரு உடல் குறைபாடு இருந்தால் சுகாதாரச் சேவைகள் பாதுகாப்பானதாகவும், பயன்படுத்த எளிதானதாகவும் இருப்பதை உறுதிசெய்வோம்.
- LGBTQIA+ சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் அனைத்துக் குழந்தைகளையும் மற்றும் இளைஞர்களையும் சுகாதாரச் சேவைகள் வரவேற்கும் என்பதை உறுதிசெய்வோம்.
- குழந்தைகள் மற்றும் இளைஞர்களை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பது என்பதை அறிந்து கொள்ளும் வகையில் எங்கள் ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்குப் பயிற்சி அளிப்போம்.
- பாதுகாப்பு பற்றிய கவலைகள் இருந்தால் எங்கள் தலைவர்கள் ஒரு நல்ல முன்மாதிரியாக இருப்பதையும் மற்றும் விரைவாகச் செயல்படுவதையும் உறுதிசெய்வோம்.
- எங்கள் விதிகள் மற்றும் திட்டங்களானது குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகின்றதை உறுதிசெய்வோம்.

## நீங்கள் என்ன எதிர்பார்க்கலாம்

ஒரு குழந்தையாக அல்லது இளையோராக, நீங்கள் பின்வருவனவற்றை எதிர்பார்க்கலாம்:

- ஊழியர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு, உங்களை மரியாதையுடன் நடத்துவார்கள்.
- உங்கள் பராமரிப்பு பற்றிய முடிவுகளில் நீங்கள் கூறுவதும் கேட்கப்படும்.
- நீங்கள் புரிந்துகொள்ளக்கூடிய வழிகளில் நாங்கள் உங்களுடன் பேசுவோம்.
- உங்கள் தனியுரிமையை நாங்கள் மதித்து, உங்கள் உடல்நலம் பற்றிய தகவல்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வோம். உங்கள் உடல்நலப் பாதுகாப்பு அல்லது உங்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் போன்ற காரணங்களுக்காகத் தேவைப்பட்டாலொழிய, உங்கள் தகவல்களை நாங்கள் பகிர மாட்டோம்.
- பாதுகாப்பாக இருக்கும் உணர்வு உங்களுக்கு இல்லையென்றால், நீங்கள் குரல் கொடுக்கலாம், நாங்கள் உங்கள் நலனைத் தீவிரமானதாகக் கருதி, விரைவாகச் செயல்படுவோம்.
- உங்கள் உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கு உங்கள் கலாச்சாரம் முக்கியமானதாகக் கருதப்படும்.
- குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குச் சுகாதாரச் சேவைகளை எவ்வாறு பாதுகாப்பானதாக மாற்றுவது என்பது குறித்த உங்கள் கருத்துக்களை நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம்.

நவம்பர் 2025 © நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை. SHPN (GR) 251028